பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 17 சனிக்கிழமை (30-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily; கதிர் 184

# வாகனேரியில் 29 படையினர் பலி!

## நேற்றுக் காலை புலிகள் அதிரடி

கொழும்பு, மே 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகனேரி — மியான்குளம் சந்திப்பில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் 29 படையினர் உயிரிழந்தனர்; 6 படையினர் படுகாயமடைந்தனர்.

ஶ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

மறைந்திருந்த விடுதலைப் புலிகள் ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றை மூன்று பக்கங்களினால் சுற்றி வளைத்து அதன் மீது சுமார் ஒன்றரை மணி நேரம் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ 3]

## செய்திச் சரம்

### வடக்கில் "சுழல் காற்று"

கொழும்பு, மே 30

வடபகுதியில் — பத்தமேனி, கதிரிப்பாய் பகுதிகளில் — நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு ''சுழல் காற்று'' என்று பெயரிடப்பட்டிருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

### 11 படையினர் பலாலியில் பலி! 40 பேர் காயம்!!

கொழும்பு, மே 30

பலாலியைச் சூழவுள்ள பகுதியில் நேற்று முன் தினம் படையினர் மேற்கொண்ட ''சுழல் காற்று'' இராணுவ நடவடிக்கையின் போது 11 படையினர் உயிரிழந்தனர். 40 பேர் படுகாயமடைந்தனர். ஶ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரூபவாஹினி இவ்வாறு தெரிவித்தது (உ-ஒ-3)

### முப்படைத் தளபதிகள் வடக்கிலாம்!

கொழும்பு, மே 30

நேற்று முன்தினம் வளலாய், பத்தமேனி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது முப்படைத் தளபதிகளும் பலாலியில் தங்கியிருந்து நடவடிக்கைகளை நெறிப்படுத்தியதாக இலங்கை வானொலி தெரிவித்தது. [ஒ-5]

### ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், மே 30

பலாலி, வயாவிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் இரண்டு ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின. மண்டைதீவு பகுதியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை—

வலி - வடக்கு தெல்லிப்பழை, அம்பனை, கொல்லங்கலட்டிப் பகுதிகளிலும் நேற்றுக் காலை 10 மணியளவில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது. [உ-3-68]

### தடையை நீக்க கோரிக்கை

சென்னை, மே 30

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை இந்திய மத்திய அரசு மறு பரிசீலனை செய்து நீக்க வேண்டும் என்று தமிழக பொதுவுடைமைக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. இத்தகவலை அக்கட்சியின் தலைவர் பி. மணியரசன் தெரிவித்தார். [உ-எ]

### முடிவுகள் தபாலில்

யாழ்ப்பாணம், மே 30

ஜி. சி. ஈ. [உயர்தர] 90 ஆம் பரீட்சையின் செயல்முறைப் பரீட்சை முடிவுகள் நேற்று தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-3)

### வவுனியாவில் படை முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், மே 30

வவுனியாவில் இருந்து மன்னார் — மதவாச்சி வீதி வழியாக மாங்குளம் பகுதியை நோக்கி முன்னேற படையினர் எடுத்த முயற்சி புலிகளின் எதிர்த்தாக்குதலால் தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் பகல் இடம் பெற்ற இந்த முயற்சி தோல்வியுற்றதை அடுத்து முகாம் திரும்பிய படையினர் அங்கிருந்து ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர். [உ-3]

### வாழை அழிவுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், மே 30

கடந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் குடாநாட்டில் வீசிய கடுங் காற்றினால் வாழைத் தோட்டங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கவென சமூக சேவைத் திணைக்களம் 55 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந் நிதி விரைவில் இங்கு அனுப்பி வைக்கப்படும் என்று சமூகசேவைப் பணிப்பாளர், யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார். [ஒ-5]

### ஆசிரியர் தெரிவு பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், மே 30

விஞ்ஞான, கணித ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில் 9 பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று வந்து சேர்ந்தன [ஒ-3]

### அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், மே 30

உணவுப் பொருள்களை ஏற்றிவரும் வாகன அணி காங்கேசனுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குவதற்குப் படையினர் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். [ஒ-3]

### பிரேமா வவுனியாவில்!

வவுனியா, மே 30

வவுனியாவில் நேற்று ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பங்குபற்றினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை காணும் என்று அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் திரு. பிரேமதாஸா நம்பிக்கை வெளியிட்டார்.

இங்கு நாம் வந்தது எமது உறவினர்களைச் சந்திக்கவே என்றும் அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார். (ஒ-எ)

### உள்ளே

கொழும்பு மகஸின் சிறையிலுள்ள ஒரு தொகுதியினரின் விவரம் உள்ளே

### முல்லையில் மோதல்

யாழ்ப்பாணம், மே 30

முல்லைத்தீவிலும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றும், நேற்று முன்தினமும் அங்கு விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாட்களும் படையினர் முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறி

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



சுழல் காத்து வந்த வேகத்திலை அடங்கியிட்டுது போலை......!

### வளலாயில் நேற்று முன்தினம்

## 2 கவச வாகனங்கள் கண்ணியில் சிதறின

வளலாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களின்போது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் படையினரின் இரு கவச வாகனங்கள் சிக்கிச் சிதறி நாசமாகின.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்துக்குச் சமீபமாகவும், கதிரிப்பாய் பகுதியிலும் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 10 படையினர் கொல்லப்பட்டனர் என்பதை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்துள்ளனர். [ஒ-3]

### களப்பலியான 9 மாவீரர்

யாழ்ப்பாணம், மே 30

வளலாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் வீரர்கள் 9 பேர் களப்பலியானார்கள். அந்த 9 மாவீரர்களும் வருமாறு:-

லெப்டினன்ட் இசைவாணன் அல்லது வசந்தன் [இராசலிங்கம் கணேசதாஸ் — துன்னாலை தெற்கு], துரோணன் [கோகுலசிங்கம் கோமடீஸ்வரன் — தம்பலகமம்], தங்கப்பன் அல்லது கேதீஸ் [பொன்னையா திருலோகநாதன் — சரசாலை], ஆவுடையான் அல்லது ஆனந்தன் [சிவகுரு குகனேந்திரன் — நவாலி தெற்கு]

சிவகுமாரன் [சர்வானந்தன் ஜெயானந்தன் — வளலாய்],

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வல்வையில் வழமைநிலை; நேற்று தாக்குதல் இல்லை

## ஆனால் கடலில் 4 கடற்படை படகுகள்

வடமராட்சி மே 30

வல்வெட்டித்துறையில் இருந்து நேற்று முன்தினம் இடம்பெயர்ந்த மக்கள் நேற்று மீண்டும் அங்கு திரும்பினர். அப் பகுதியில் நேற்று அமைதி நிலவியது.

வர்த்தக நிலையங்கள் பல திறக்கப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

நேற்று மாலை வரை தாக்குதல் சம்பவங்கள் ஏதும் நிகழவில்லை.

இதேசமயம், கடற்பிராந்தியத்தில் நான்கு கடற்படை படகுகள் தரித்து நிற்கின்றன. (ஒ-165-15)

### 'இந்து' பத்திரிகை கருத்து:

## இலங்கைக்கு 'வில்லன்' இந்தியா; அதுதன் விரலை சுட்டுக் கொண்டது!

சென்னை, மே 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா தடை விதித்ததைத் தொடர்ந்து இலங்கை தொடர்பாக இந்தியாவின் இராஜதந்திரம் மிகவும் சிக்கல் வாய்ந்த நிலைமை ஒன்றை எதிர்நோக்குகின்றது.

இலங்கையின் வட-கிழக்கில் சமாதானம், அமைதி ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இந்தியா குலைக்கிறது என்று கொழும்பு குற்றஞ்சாட்டும் ஆபத்து உண்டு.

இவ்வாறு ''இந்து'' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

பிரேமதாசாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குக் காரணமான ''வில்லன்'' இந்தியாவே என்ற குற்றச்சாட்டிலிருந்து இந்தியா தப்புவது என்பது அது எதிர்நோக்கும் பெரும் இராஜதந்திர சவாலாகும் —

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் இந்தியா சிக்குப்படுவது இலகுவான காரியமாகிவிட்டது. அவ்வாறு சிக்குப்படும் போதெல்லாம் இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு தினம்



அமரர்

### மருத்துவ கலாநிதி ஜே.பி.சி. பிலிப்ஸ்

வையகம்: 19-03-1932 வானகம்: 31-05-1991

கண்ணீர் அஞ்சலி


அன்பே! என் உடன் பிறப்பே! தவக்கொழுந்தே!
ஆருயிரே! அணையிழந்து துடிக்கின்றேனே!
என்புருகி உதிரமெலாம் நீராயோட
என்துரையைக் காணாமல் ஏங்குகின்றேன்
மன்னவனே! மலர்முகமும் பொன்சிரிப்பும்
மனக்கண்முன் வந்து வந்து வருத்துதையா!
இன்பநிறை வானபரன் மோட்ச வீட்டில்
என்துயரம் நீங்க வரம் ஈந்தாள் நீரே!

உன் நினைவில் என்றும் வாடும்;
அன்புச் சகோதரி.

114, கதிற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2362]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை தரன்
### (குணரத்தினம் இராஜசேகரம்)

ஈழ மண்ணில்: 17-2-1971 ஈழ மண்ணிற்காக: 30-5-1989

அழகு தமிழ் வாழும் ஆதிகோவிலடி தந்த
மகவு இதுவென்று மனை மகிழ்ந்த வேளை
பழகு நடைமறந்து தலைவன் படைதனில் இணைந்து
ஈழ மாமுனைப்போரில் இந்தியனை எதிர்த்து -
மாவீரனானாயோ!!!

உன் வீர மரணத்தை நினைவு கூரும்;

நண்பர்கள்,
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்,
பழைய தோட்டம்,
கம்பர்மலை.

[21088]

## ரெலோ செல்வம் கொழும்பிலாம்

கொழும்பு, மே 30

ரெலோ இயக்கத்தின் தலைவர் என்று கூறப்படும் அடைக்கலநாதன் செல்வம் நேற்று முன்தினம் சென்னையில் இருந்து கொழும்பு வந்துள்ளார் என கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது. [இ-எ]

## மரக்கன்றுகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 30

ஆலயங்களுக்குத் தேவையான வில்வம், மகிழங்கன்றுகள் மில்க்வைற் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. [இ-3]

## பால்மா வகைகளின் விலை உயர்ந்தது

கொழும்பு, மே 30

இறக்குமதியாகும் சகல பால்மா வகைகளினதும் விலைகள் கடந்த புதன்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் மேற்கொண்ட பாதுகாப்பு வரி அதிகரிப்பு, ஊதியம் உயர்வு, ஆகிய காரணங்களால் இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய விலை விவரம் வருமாறு: அங்கர் [400 கி] — 56 ரூபா, நெஸ்பிறே [400 கி]— 56 ரூபா, லக்ஸ்பிறே [500 கி] — 64 ரூபா, லக்ஸ்பிறே [250 கி] — 33 ரூபா, லக்ஸ்பிறே [400 கி] — 52 ரூபா, லக்ஸ்பிறே [ஒரு கிலோ] — 120 ரூபா.

மற்றும் கவ் அன் கேற் உட்பட குழந்தைகள் பால்மா ஆறு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பகிஷ்கரிப்பு முடிவில் மாற்றம் இல்லை

கொழும்பு, மே 30

தெரிவிக் குழுவின் நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கும் முடிவில் மாற்றம் எதுவுமில்லை. ஆனால் அது பற்றி தமிழ்க் கட்சிகளோடு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இப்படி சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. [இ-எ]

## தமிழ்மொழி மூல பாடசாலைகளில் 391 வெற்றிடங்கள்

கொழும்பு, மே 30

மேற்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 391 வெற்றிடங்கள் இருப்பதாக மேற்கு மாகாண கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவற்றில் புதிய நியமனம் மூலம் 250 வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் —

சில பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்களை பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு இடம் மாற்றுவது மூலம் மிகுதி வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## தவறானது என்கிறது முஸ்லிம் லீக்

இனப்பிரச்சினை தொடர்பாக நாட்டில் உள்ள முஸ்லிம் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளும் ஒரு புரிந்துணர்வுக்கு வந்துள்ளன என்று வெளியான செய்தி தவறானது.

இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம். சி. எம். கலீல் விடுத்த அறிக்கை [illegible] தெரிவித்திருக்கின்றார். (இ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22-04-1929

மறைவு: 30-04-1992

அமரர்

### பூதப்பிள்ளை கனகரத்தினம்

(கலாமேதை - நடிகமணி - கம்பன்கோட்டம்)

திதி: 30-05-1992

எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்டீரே! மின்னல் போல் மறைந்தீரே! நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும், உங்கள் நினைவலைகள் எங்கள் இதயங்களை விட்டு என்றென்றும் அகலா.

அன்னாரின் சுகயீன காலத்திலும், இறுதிச் சடங்கிலும் கலந்து கொண்டு, உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர் அனைவரையும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயர் கொள்ளும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சங்கானை:
சகோதரி — இராசேஸ்வரி
மைத்துனர் — செல்லத்துரை.

பாரதி வீதி,
இணுவில்.

[21179]

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராஜகோபால் இராஜ்மோகன்

(மருத்துவபீட மாணவன் - பேராதனை)

அன்னை மடியில்: 07-03-1968 ஆண்டவன் அணைப்பில்: 30-05-1987

மகனே! உன் அன்பான
புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும்
எம் இதயம் கவர்ந்த செல்வமே!
காலன் உன்னை இளம்வயதில் பறித்தாலும்,
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உம்மை எங்களால் மறக்கமுடியவில்லை.

உமது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி,

பிரிவால் வாடி நிற்கும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அன்ரிமார், சித்தப்பாமார், மாமா, மாமி.

திக்கம்,
அல்வாய் மேற்கு.

(4883)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பி ஓடும்படி கூறிவிட்டு படையினர் எம்மீது சுட்டனர்

## கதிரிப்பாயில் தப்பிய பெண் தகவல்

யாழ்ப்பாணம், மே 30

படையினர் எங்களை ஓடும்படி கூறிவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது எங்களில் ஒருவர் உயிரிழந்தார். நாங்கள் இருவரும் நிலத்தில படுத்தும், தவழ்ந்தும் முக்கால் மைல் தூரத்தைக் கடந்து விடுதலைப் புலிகள் நின்ற பகுதியை அடைந்தோம்.

நேற்று முன்தினம் வளலாய் கதிரிப்பாயில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வருணன் பகுதியில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்குண்டு தப்பிய இருபெண்களில் ஒருவரான வளவாயைச் சேர்ந்த செல்வராசா சிவபாக்கியம் [வயது 52] மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதயன் செய்தியாளரிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பவதினம் இராணுவம் வந்து விட்டது எனக் கேள்விப்பட்டதும் வீட்டின் குளியல் அறைக்குள் நானும் இடைக்காட்டைச் சேர்ந்த பொன்னையா வள்ளிப்பிள்ளை (வயது 80) என்பவரும் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான பொன்னுத்துரை அன்னலட்சுமி [வயது 60] ஆகியோரும் ஒளித்திருந்தோம்.

அச் சமயம் நாம் நின்ற வீட்டுப் பகுதியில் புல்டோசர் ஒன்று வந்து நின்றது.

அங்கு வந்த இராணுவத்தினர் சிலர் வீட்டின் கதவுகளைத் தள்ளி திறந்து வீட்டிற்குள் சென்று அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டிருந்தனர்.

பீதிகொண்ட நாம் நேராக அவர்களிடம் செல்வோம் என தீர்மானித்து கதவைத் திறந்து கைகளை உயர்த்தியவாறு சென்றோம்.

அப்போது சிப்பாய்களில் ஒருவன் எங்கள் மீது பாய்ந்து எங்களில் ஒருவரைப் பிடித்து இழுத்து ஏதோ சிங்களத்தில் கத்தினான்.

அச்சமயம் மற்றொருவன் எங்களைச் சுடும்படி கூறினான்.

பின்னர் எங்களை விசாரித்த பின் தாங்கள் அப்பால் செல்லப் போவதாகவும், கதவைப் பூட்டி விட்டு உள்ளே இருக்கும் படியும் படையினர் கூறினார்.

படையினர் அடுத்த வளவுப் பக்கம் சென்ற போது நாம் மூவரும் பின்பக்கத்தால் வெளியேறி பதுங்கிப் பதுங்கி கதிரிப்பாய் சுடலைப் பகுதியை அடைந்தோம். அப்போது அப்பகுதியை நோக்கி சரமாரியாக சன்னங்கள் வந்து கொண்டிருந்தன. நாம் மூவரும் சுடலைப் பகுதியில் முகம்குப்புறப் படுத்துக் கொண்டோம். கொளுத்தும் வெயிலில் சுமார் 2 மணி நேரம் அவ்விடத்திலேயே படுத்திருந்தோம்.

வேட்டுச் சத்தங்கள் சற்றுக் குறையவே நாம் எழுந்து செல்கையில் படையினரை மீண்டும் கண்டோம். எம்மை ஓடும்படி அவர்கள் உத்தரவிட்டனர். அப்போது துப்பாக்கி வேட்டு எம்மை நோக்கித் தீர்க்கப்பட்டது அப்போது அன்னலட்சுமி பலியானார்.

அதன் பின்னர் ஒருவாறு விடுதலைப்புலிகளின் பகுதிக்கு தப்பி வந்து அவர்களின் உதவியுடன் ஆவரங்காலை வந்தடைந்தேன்.

இப்படி அவர் கூறினார்.

[இ-15]


# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 93**

வட்டம்

ஆரம்பம்: 31-05-1992 (ஞாயிறு)

திரு. கமலசிங்கம்

**A/L 94**

தூய / பிரயோக } கணிதம்

ஆரம்பம்: 09-06-1992

[சி-2633]



# Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி தற்போது

வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25% விசேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

**பாட்டா** மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில்றோட் வவுனியா. 30, குமார வீதி கொழும்பு-11.

[20752]



# பொருளியல்: கலாகரன்

சனி — ஞாயிறு

92 பிரிவு
— இலங்கைப் பொருளாதாரம் 9-10

93 பிரிவு - 1
— நெகிழ்ச்சிக் கோட்பாடு 8- 9

94 பிரிவு - 1
— பொருளாதார முறைமை 10-11

93/94 பிரிவு - 2
— பொருளாதார அடிப்படை பிரச்சினை 11-12

வினா - விடை வகுப்பு:

92 பிரிவு I — செவ்வாய், வியாழன் 8 — 9
92 பிரிவு II — செவ்வாய், வியாழன் 9 — 11

பகுதி I — உற்பத்தி சாத்திய வளையி
பகுதி II — வரவு-செலவுத்திட்டம்

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[சி-2629]


## டாக்டர் பிலிப்ஸ் நினைவு தினம்

குருநகர், மே 30

வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் அமரத்துவம் அடைந்த ஓராண்டு பூர்த்தியை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நாளை 31ஆம் திகதி அனுட்டிக்கவுள்ளது.

நாளை காலை 6 - 30 மணிக்கு யாழ். பற்றிக்ஸ் கல்லூரி வளாகத்துள் உள்ள பத்திரிசியார் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

அதனைத் தொடர்ந்து பற்றீஷன் தொழில் பயிற்சி நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் வண. ஜீ. எ. பிரான்சின் யோசெப் அடிகள் தலைமையில் நினைவுக்கூட்டம் இடம்பெறும்.

முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

[அ-51]

## மறு பரிசீலனை செய்யப்படுமாம்

கொழும்பு, மே 30

முஸ்லிம் ஊர்காவல் படையினருக்கு பயிற்சி அளிப்பதிலும் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதிலும் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் மறு பரிசீலனை செய்யப்படும்.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் [illegible]

[illegible]

### இலங்கையரிடமிருந்து

# பிடிபட்ட ஹெரோயினின் பெறுமதி 40 லட்சம் டொலர்

கொழும்பு, மே 30

கடந்த செவ்வாய்க்கிழமை இத்தாலியில் கைது செய்யப்பட்ட ஏழு இலங்கைத் தமிழ் இளைஞர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதை வஸ்துவின் பெறுமதி 40 லட்சம் அமெரிக்க டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'த ஐலண்ட்' இத் தகவலை வெளியிட்டுள்ளது.

இக் குழுவின் தலைவர் அரவிந்தன் என்றும் —

இந்தியாவைத் தளமாக வைத்து போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டு வந்தவை சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-எ]


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 04 — 10 — 1950



மறைவு: 05 — 06 — 1990

## வ. ஞானச்செல்வம்

[முத்துமாரி அம்மன் கோவில் - பூசகர்]

(மறவன்புலோ)

உமது ஆத்மா சாந்தி அடைய
அம்பாளை வேண்டுகின்றோம்.

தாய், சகோதரங்கள்,
மைத்துனர் இ. தங்கராசா.

மறவன்புலோ,
சாவகச்சேரி.

[4893]



# ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 24 — 06 — 1974




ஆண்டவன் அடியில்: 30 — 05 — 1991

அமரர்

## நவரத்தினம் மதியழகன்

(யாழ்ற்றன் கல்லூரி, க.பொ.த. (சா.த.) மாணவன்)

மறப்பதும் எங்கே? இந்த மண்ணில்
மலரா உதிர்ந்த முன்னவனே!
பொறுப்புணர்வோடு மூத்தவனாய் - குடும்ப
புகழினை ஏந்தி நடந்தாயே!
சிறப்புகள் பலவும் உன்னால் நிகழும் என
சிந்தையில் நினைத்திருந்தோம்
பறந்த எம் உயிரே! உந்தன் நினைவே!
பாரமாய் நெஞ்சில் கனக்குதையா!

கண்கள் சிந்தும் கண்ணீர் - எமது
கவலையை ஆற்றாது காலம்
எங்கள் நெஞ்சில் உந்தன் நினைவை
நீக்காது - பிரிவுத்
துன்பம் வாட்டும் துயரினை துடைக்க
வழியேது - மகனே!
இன்பம் மீண்டும் பிறக்கும் இங்கு - நீ
இரங்கி வரும் போது.

உமது ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஐயா, அம்மா. தம்பிமார்,
பேர்த்தியார், சின்னையாமார்.
சின்னம்மாமார், மாமாமார், மாமிமார்,
பெரியப்பா, பெரியம்மா.

உயரப்புலம், ஆனைக்கோட்டை, மணற்பிட்டி, காரைநகர்.

[21142]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மில்லிற்கு தேவையான Grinder No- 7 Huller விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. க. ஜெயானந்தன். 83/16, அரசடி றோட், தஞ்சி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [21152]

நீண்ட கால பாவனைக்கு உங்கள் படங்களை சிறந்த முறையில் பிறேம் செய்து கொள்ளவும், மற்றும் சுவாமி படங்கள், சோக்கேஸ் கண்ணாடிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும் யாழ். நகரில், யாழ். கண்ணாடி நிலையம், இல. 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [21119]

### மணப் பெண்கள் தேவை

கத்தோலிக்க, 41 வயது, அரச பணியாளருக்கு ஆசிரியையும், இந்து குற்றமற்ற 28 வயது, அரச பணியாளருக்கும், குற்றமற்ற 31 வயது பட்டதாரிக்கும், குற்றமற்ற 31 வயது தனித்தொழில் நடத்துபவருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [21160]

### இலவச திருமண சேவை

29 வயது, கேட்டை, செவ்வாய் 12 ஆசிரியைக்கு ஏற்ற மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4887]

34 வயது ஆசிரியைக்கும், 37 வயது ஆண் பொறியியலாளருக்கும் தகுந்த மணமகள் தேவை. மாற்றுச் சம்பந்தமும் கவனிக்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4891]

### தேவை

பழரச பானங்கள் விற்பனை செய்வதற்கு சைக்கிள் விற்பனையாளர்கள் தேவை. திறமையுள்ளவர்கள் நல்ல கொமிசன் பெறலாம். விண்ணப்பிக்கவும். இல. 845, C/o உதயன். [சி-2620]

### மணமகள் தேவை

வெளி நாட்டில் தொழில் பார்க்கும் ஆண் 32 வயது. நட்சத்திரம் அத்தம், உதயச் செவ்வாய். தகுந்த மணமகளைத் தாயார் எதிர்பார்க்கிறார். தொடர்பு. C/o, 415, உதயன். [21178]

### அம்பாள் திருமண சேவை

டாக்டர், விரிவுரையாளர், பட்டதாரி, ஆசிரியர் ஆகியோருக்கு ஏற்ற மணமக்கள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [21174]

### பொது அறிவு மஞ்சரி

கிராம சேவையாளர், கணித - விஞ்ஞான ஆரம்ப ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கு உகந்த நூல் தொகுப்பு. ஆக்கியோன்: த. க. பஞ்சாட்சரம், யாழ். நகர் புத்தகசாலைகள் அனைத்திலும் பெற்றுக் கொள்ளலாம். [சி-2632]

### றப்பர் ஸ்டாம்ப்

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்கு தேவையான றப்பர் ஸ்டாம்புகளை விரும்பிய டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள். சோதி அச்சகம், மேல்மாடி இல. 25, தனன்களப்பு வீதி, சாவகச்சேரி. [சி-2358]

### மணமகன் தேவை

யாழ். இந்து. 40 வயது. 8 இல் செவ்வாய், ஆயிலியம் நட்சத்திரம், கிரகபாவம் 32 உடைய சைவ போசன பட்டதாரி ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். சீதனம் பேசித் தீர்க்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [21155]

இந்து, செவ்வாய்க் குற்றமற்ற, 33 வயது, (உத்தராடம் நட்சத்திரம்) அழகிய, படித்த விவேகமுள்ள மணப் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [21181]

இந்து, செவ்வாய்க் குற்றமற்ற (கிரகபாவம் 36, லக்கினத்தில் கேது, ஆயிலியம் நட்சத்திரம்) அழகிய, படித்த, 25 வயது மணப்பெண்ணுக்கு பெற்றோர் பட்டதாரி அல்லது Professionaly Qualified மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [21180]

## அங்குரார்ப்பண கூட்டம்

வட்டு. இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு எஸ். டாஸ் தலைமையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். [இ]

## கொடுப்பனவுக்கு ரூ. 30 லட்சம்

யாழ். மாவட்டத்தில் கடும் பாதிப்புற்றோர் புனர்வாழ்வு கொடுப்பனவுகளுக்காக 30. லட்சம் ரூபா யாழ். செயலகத்துக்கு வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இறநத, காயமடைந்தவர்கள் நிவாரணத்துக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L [கலை, வர்த்தகப்]

94 பிரிவு II

93 பிரிவு III

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 30-05-1992

(காலை 8-00 மணி.)

கலை, வர்த்தக வகுப்புக்களுக்குத் தனிததுவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். [சி-2627]

## ஓராண்டு நினைவஞ்சலி



விரஜனனம்: 09 — 10 — 1971

விரச்சாவு: 09 — 06 — 1991

### சிதம்பரப்பிள்ளை சுரேஸ்
[லெப். கரிகாலன்]

திதி: 30—05—1992

எங்கள் அருமைச் செல்வத்தின் பிரிவால் துவண்டு துடிக்கும்:

பெற்றோர், சகோதர சகோதரிகள்.

வரணி வடக்கு.
வரணி. [21130]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### விநாயகமூர்த்தி சதாசிவம்
[இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்]

அன்னையின் மடியில்: 04-02-1922
தரணியின் மடியில்: 05-06-1986



### சதாசிவம் சிவானந்தமூர்த்தி

அன்னையின் மடியில்: 04-05-1953
தரணியின் மடியில்: 11-03-1986

திதி: 30 — 05 — 1992

குல விளக்குகளே! நீங்கள் அணைந்தீர்கள்;
குமுறுகிறோம் உங்கள் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
பாழும் விதியிலே எம்மை விட்டு
பாதியிலே சென்று விட்டீர்கள்!
மின்னலென நீங்கள் மறைந்து
ஆறாண்டு சென்றிடினும்
உங்கள் உறவை மறப்போமா,
மறக்கும் நெஞ்சம் உண்டோ?

இவர்களின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், நண்பர்கள்.

மூத்த தம்பியார் வளவு,
வதிரி - கரவெட்டி. [சி-2370]

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 03 — 05 — 1955

இறப்பு: 30 — 05 — 1991



### சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா
[யாழ். போதனா வைத்தியசாலை- ஊழியர்]

எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

க. கார்த்திகேசு,
41/2, ஆர்த்திகுடி வீதி,
கந்தர்மடம். [21151]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### என்னைக் கொலை செய்தால் ஒழிய

# எனது அரசியல் வாழ்வை எவராலும் முடிக்க முடியாது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, மே 30

என்னைக் கொலை செய்தால் ஒழிய எனது அரசியல் வாழ்வை எவராலும் முடிவுக்குக் கொண்டு வர முடியாது.

ஜனாதிபதி பிரேமதாஸா மொனராகல மாவட்டம் - புத்தள என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:-

எனக்கு எதிராக விஷமப் பிரசாரத்தை நடத்தி வருபவர்கள் என்னைக் கொல்லவும் முயற்சிக்கக்கூடும். என்னைக் கொல்வதன் மூலமே அவர்கள் தங்கள் நோக்கத்தில் வெற்றி காண முடியும். நான் உயிருடன் இருக்கும் வரை அச்சதிகாரர்களை வெல்ல விடமாட்டேன்; மக்களைக் கொல்லவும் அனுமதிக்க மாட்டேன்.

ஒளித்து நின்று அசிட் வீசியவர்கள், களவாக பெட்டிசம் தயாரித்தவர்கள், முதுகின் பின்னால் குத்துபவர்கள் அனைவரும் கோழைகள் ஆவர். முதுகெலும்பில்லாத கோழைகள் நிறைந்த அந்தக் கூட்டத்தை எதிர்நோக்க நான் தயாராக இருக்கின்றேன்.

ஜனநாயக வழியில் திறந்த மனதுடன் பகிரங்கமாக அவர்களால் ஏன் செயற்பட முடியாதுள்ளது? ஒளித்து மறைந்து சதி செய்யும் தந்திரங்களில் அவர்கள் ஏன் ஈடுபட வேண்டும்.

எனக்கு எதிரான சதிகாரக் கூட்டம் ஜே. வி. பியின் போர்வையில் தங்கள் எண்ணங்களை நிறைவேற்ற முயற்சிக்கின்றது.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா கூறினார். [த-எ]

# கொழும்புப் பத்திரிகைகள் புலிகளின் ஊதுகுழல்கள்!

## சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மே 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊதுகுழலாக [Mouthpiece] அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் மாறி வருகின்றன.

சுதந்திரக்கட்சி இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துமுகமாக தவறான தகவல்களைப் பரப்பிவரும் அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊதுகுழலாகவும் (Mouthpiece) பேச்சாளனாகவும் (Spokesman) மாறி வருவது தீமையைத் தருவதாகவும் குழப்பம் தருவதாகவும் அமைந்துள்ளன.

தீவிரவாதக் குழு ஒன்றின் இரகசிய வானொலிகளில் ஒலிபரப்பாகும் விஷயங்கள் அரசுப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இது ஆட்சியினருக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் செயலுக்கு ஒப்பானதாகும்.

தனது கருத்துகளுக்கு இணங்கிச் செல்லாத பத்திரிகைகளின் அலுவலகங்களை மூடிவிடும் விஷயத்தில் மின்னல் வேகத்தில் செயற்படும் அரசாங்கம்—

அப்படிப்பட்ட பத்திரிகைகளை சி. ஐ. டி. பொலீஸாரை அனுப்பியும் வேறு வழிகள் மூலமும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் துன்புறுத்தும் அரசாங்கம்—

சம்பந்தப்பட்ட இரகசிய வானொலிச் செய்திகள் அரசுப் பத்திரிகைகளில் வெளியாவதைக் கண்டும் காணாமல் செயற்படுவது எமக்கு பெரிதும் ஆச்சரியத்தைத் தருகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# சைக்கிளில் சென்றவரிடம் 57 கிலோ வெடிமருந்து

சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒரு நபரிடம் இருந்து 57 கிலோகிராம் வெடிமருந்துப் பொருள்களைப் பொலீஸார் கைப்பற்றினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் இச் சம்பவம் இடம்பெற்றது. புத்தளம் நோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரே வெடிமருந்துப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பை ஒன்றில் அவ்வெடிமருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அப்பையில் அரிசி எடுத்துச் செல்வது போன்று வெளிப்பார்வைக்குக் காணப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸார் நடத்திய விசாரணையின் போது கைதான நபர், நீர்கொழும்புப் பகுதியில் உள்ள பட்டாஸ் தயாரிப்பாளர்களிடம் இருந்து கிலோ 250 ரூபா வீதம் வெடிமருந்துப் பொருள்களை வாங்கினார் என்றும் —

புத்தளத்தில் உள்ள சிலருக்கு கிலோ 500 ரூபா வீதம் அதனை விற்று வந்தார் என்றும் தெரியவந்தது. [இ-எ]

---

## கண்ணீர் அஞ்சலிகள்

### செல்வன் சாள்ஸ் றொசான் சௌந்தரராஜ்
### செல்வி சாந்தினி சௌந்தரராஜ்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வன் சாள்ஸ் றொசான், செல்வி சாந்தினி சௌந்தரராஜ் ஆகியோரின் இழப்பிற்கு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும், விரிவுரையாளர்களும் தங்கள் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்துள்ள சகோதரி வினோதினி சௌந்தரராஜ் அவர்களுக்கும் எமது அனுதாபங்கள்.

மாணவர் அவை-
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி.

[21185]

---

# இன்று

யாழ்ப்பாணம், மே 30

பலாலி ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல தடகள ஆட்ட விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்பட்ட 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்தை பெறும் கழகத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

★ ★ ★

''படைப்பின் ஒருமைப்பாடு'' என்னும் பொருள் குறித்த இறைமக்கள் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிமுதல் யாழ். பரி. யோவான் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

# ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மே மாதத்திற்குரிய வவுச்சர்கள் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வரவுள்ள 'குமண' கப்பலில் எடுத்துவரப்படும் என்று அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (ஓ-5)

# கவின்கலை செய்முறைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 30

1990 ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய கவின்கலைப் பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும், விவரங்களும் நேற்று வந்து சேர்ந்துள்ளன.

91 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. (சாதாரண) தர பரீட்சையில் செயல்முறைப் பரீட்சைக்கு தோற்றாதவர்களும் —

89 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் தோற்றிய தனியார் பரீட்சார்த்திகளும் —

இந்த செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை தொடர்பான விவரங்களை கல்வி அலுவலகத்தில் [illegible] தெரிவித்தார். [அ-3]

# இளவாலை மீனவர்களை விடுவிப்பதற்கு மறுப்பு

தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் கடலில் வைத்து கைது செய்யப்பட்ட இளவாலையைச் சேர்ந்த ஐந்து மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய முடியாது என்று கூட்டுப்படைகள் தலைமையகம் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்ட மேற்படி ஐந்து மீனவர்களையும் விடுவிக்குமாறு கோரும் கோரிக்கை ஒன்றை இளவாலை சென். ஆன் தேவாலய பங்கைச் சேர்ந்த மதகுருமார்கள் அரச அதிபர் ஊடாக கூட்டுப்படைகள் தலைமையகத்துக்கு அனுப்பி இருந்தனர்.

கிறிசாந்தா அரியரட்ணம், பிறேங்கோபிள்ளை கிறிஸ்தோபர், பிரான்ஸிஸ் நிக்கலஸ், அந்தோனிப்பிள்ளை மனோகரன், குழந்தைவேலு குணசேகரன் ஆகிய அந்த ஐந்து மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய முடியாது என்றும்—

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூட்டுப்படைகள் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார். [ஓ-5]

# நண்டுப் பொதிக்குள் ரூ.1 கோடி கரன்ஸிகள்!

கொழும்பு, மே 30

நண்டுகள் அடங்கிய பொதிக்குள் மறைத்து வைத்து ஒரு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்ஸிகளை சிங்கப்பூருக்கு கடத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒன்றை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை முறியடித்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள ஏற்றுமதி நிறுவனம் ஒன்று அந்த நண்டுப் பொதியை சிங்கப்பூரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு விலாசமிட்டு அனுப்பியது.

அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் சிங்கப்பூர் கரன்ஸிகள் அப்பொதிக்குள் வைக்கப்பட்டிருந்தன.

அந்த பொதி கட்டுநாயக்காவில் வைத்து சுங்க அதிகாரிகளால் பிரித்துப் பார்க்கப்பட்ட போது இந்த மோசடி அம்பலமாகியது.

கடலுணவு வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் பிரபலமாக விளங்கி வரும் கொழும்பு நிறுவனம் ஒன்றே இந்த மோசடியில் ஈடுபட்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. [இ-எ]

### நேற்று முன்தினம் இடம் பெயர்ந்த

# அச்சுவேலி, வடமராட்சி மக்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 30

நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்துள்ள அச்சுவேலி, மற்றும் வடமராட்சியின் சில பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ஒரு வார இலவச உலர் உணவு வழங்கப்படும்.

இதற்கான பணிப்புரையை இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியிருக்கும் பிரிவின் உதவி அரசாங்க அதிபர்களுக்கு, யாழ். செயலகம் விடுத்துள்ளது.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து ஆயிரத்து 800 குடும்பங்கள் இடம் பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ளதாக செயலகக் கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது.

# கும்பகோண குண்டுவெடிப்பு விசாரிக்க தனி பொலீஸ் படை

சென்னை, மே 30

கும்பகோணம் தூரதர்ஷன் அஞ்சல் நிலையக் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க தனியான பொலீஸ் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அஞ்சல் நிலையக் காவலாளர் உட்பட 30 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புரட்சிகர இளைஞர் படை என்ற அமைப்பு இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

மோப்பம் பிடிக்க பொலீஸ் நாய் பயன்படுத்தப்பட்டதாகவும் அது பயனளிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் தமிழகத்தில் கைதான 42 பொதுமக்களில் 5 பேர், கும்பகோணம் தூரதர்ஷன் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்று சந்தேகிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

தஞ்சாவூர், இராமநாதபுரம் போன்ற கரையோர நகரங்களில் இலங்கைப் போராளிக் குழுவுக்குச் சொந்தமான பல கட்டடங்களையும் அலுவலகங்களையும் தமிழ்நாடு பொலீஸார் மூடி 'சீல்' வைத்துள்ளனர் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

# இராணுவ-விமானப்படை தளபதிகள் மட்டக்களப்பில்

கொழும்பு, மே 30

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவும் விமானத் தளபதி டெரன்ஸ் குணவர்தனாவும் மட்டக்களப்புக்குச் சென்று அங்குள்ள இணைப்பதிகாரி பிரிகேடியர் அங்கமன மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

கடந்த செவ்வாய் அச்சந்திப்பு இடம் பெற்றது.

அதற்கு முன்னர் இரு தளபதிகளும் திருகோணமலை மற்றும் அம்பாறைப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, முறையே பிரிகேடியர் ஸ்ரீ பீரிஸ், கேர்ணல் நீல் டயஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்கள்.

பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷப்றா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்
கிரிக்கெட் போட்டித் தொடர்
இறுதியாட்டம்

## ஷப்றா அணி எதிர்
## ஜொனியன்ஸ் அணி

நாளை யாழ். இந்து மைதானத்தில்!

[சி-2374]


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தையா

காரைநகர் தன்னையை பிறப்பிடமாகவும், சித்தங்கேணி - டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற காசிநாதர் வேலுப்பிள்ளை - பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மார்க்கண்டு சுந்தரம்மா, இளைப்பாறிய ஆசிரியர் காசிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்ரமணியம், சிவபாதசுந்தரம் [ஜேர்மனி], சிவபாலன், சிவராசா, தவமணி, சிவலட்சுமி, சிவயோகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானத்தின் பெரிய தந்தையும், பாலசுப்ரமணியம் [மார்க்கண்டு அன் சன்ஸ், கிளிநொச்சி], கணேசன், இராசரத்தினம் [ஜேர்மனி], சரஸ்வதி, சாம்பவி [லண்டன்], புனிதவதி ஆகியோரின் மாமனாரும், இராமநாதன், மயில்வாகனம் [மார்க்கண்டு அன் சன்ஸ், வவுனியா], அன்னம்மா, பாக்கியம், செல்லம்மா, தையல்நாயகி ஆகியோரின் மாமனாரும், மார்க்கண்டு செல்லாச்சி, சதாசிவம், தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரன் [லண்டன்], மகேஸ்வரன், யோகேஸ்வரன், யோகேஸ்வரி, குகனேஸ்வரன், தேவப்பிரியா, கிருஸ்ணப்பிரியா, தமிழினி, தனிஷா, நந்தினிதேவி, சிவனேஸ்வரன், சுகந்தி, சிவறஞ்சன், சிவகரன், சிவகலாநாதன், சிவஞானசுந்தரம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வே. காசிநாதன் (சகோதரன்)
டச்சு வீதி,
சித்தங்கேணி.
[21186]

### திருமதி மலர் சிவானந்தன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கண்டுக்குளி சோமசுந்தரம் அவெனியூவில் வசித்தவரும், யாழ். C. L. S. புத்தகசாலையில் பணிபுரிந்தவருமாகிய திருமதி ஸ்ரீதவமலர் (மலர்) சிவானந்தன் 25 05-92 லண்டனில் காலமானார். இவர் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களாகிய Dr இராசையா - பரிமளம் தம்பதியரின் புதல்வியும், கனகம்மா வாத்தியாரின் பேத்தியும் காலஞ்சென்ற சிவானந்தனின் மனைவியும், ஸ்ரீமகலா [லண்டன்], நிர்மலன், கல்பனா [லண்டன்], ரஞ்சித் ஆகியோரின் அன்புத்தாயாரும், விஜயகுமார் [லண்டன்], மாலினி, றொஷான் [லண்டன்] ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கிறிஸ்தோபர், சோமசுந்தரம், காலஞ்சென்ற ரூபி, கமலானந்தன், காலஞ்சென்ற Dr. விவி சோமசுந்தரம், திருமதி போல் நவரட்ணம் [அமெரிக்கா], காலஞ்சென்ற அங்கஸ் இராசையா [சிங்கர்], சந்திரமலர் [அமெரிக்கா], அற்புதமலர் [அமெரிக்கா] ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 02-06 92 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

தகவல்:
Dr சுறாஜ் சோமசுந்தரம்
(மருமகன்)
33, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
[21184]

### எம். எஸ். அரியம்

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்கொழும்பு பிரபல வர்த்தகருமான எம். எஸ். அரியம் காலமானார். இவர் திலகவதியின் அன்புக் கணவரும் மல்லிகா, அன்ரன், பூமிக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இவரின் பூதவுடல் நீர்கொழும்பில் 30-5 92 இன்று நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. துரைசிங்கம்
கரம்பொன்
115, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
[21183]

## அஞ்சலிக் கூட்டங்கள்

வடமராட்சியிலும், வடமராட்சி கிழக்கிலும் மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

கடற்புலிகள் மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டம் இன்று வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் — பிலிப்பு நேரியான் கோவிலடியிலும்—

பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டம் நாளை [ஞாயிறு] அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியிலும்—

மேஜர் சலாம் மாவீரரின் அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி இமையாணன் சலாம் விளையாட்டரங்கிலும்— இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

## மீண்டும் சுந்தர்

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுப் பதவி ஏற்றார்.

இம்மாதம் 15 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அவர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அதே பதவிக்கு — ஒரு வருட காலத்துக்கு — நியமிக்கப்பட்டுள்ளார். (அ-3)

## இலங்கைக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தியா தனது விரலைச் சுட்டுக் கொண்டது —

இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்து நகர்வதற்கு இந்தியாவினால் எந்தவொரு நேர்மையான அபிப்பிராயமும் தெரிவிக்கப்பட்டதாக இல்லை. —

இந்தியாவின் தரப்பில் மேற்கொள்ளப்படக்கூடிய எந்த ஒரு சமாதான முன் முயற்சியும், மீண்டும் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையீடாகவே கருதப்படும். — இவ்வாறு ''இந்து'' மேலும் தெரிவித்திருக்கிறது.

[அ-உ-3]

## முல்லையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
யடிக்கப்பட்டது என்றும்—

படையினரின் இரு கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டன என்றும்—

படையினர் தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விமானத் தாக்குதல்கள், ஷெல் வீச்சு, பீரங்கித் தாக்குதல் ஆகியவற்றில் வீடுகள் பல சேதமடைந்ததாகவும், பொதுமக்களின் உடைமைகள் பெருமளவில் நாசமாகியதாகவும் தெரியவந்தது.

குண்டு வீச்சில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் அலம்பிலைச் சேர்ந்த கந்தையா மாசிலாமணிப்பிள்ளை (வயது 85) என்ற வயோதிபரே படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேசமயம், முல்லைத்தீவில் நடந்த மோதலில் 3 படையினர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15-3]

## களப்பலியான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பவளன் [மகேந்திரராசா நந்தகுமார் — தொண்டமனாறு], விவேகன் (பாஸ்கரன் சிவநேசன் — அளவெட்டி], இலக்கியன் [சிவதாசபிள்ளை புஸ்பானந்தன் — கட்டுடை], வீரச்செல்வன் அல்லது வதனன்.

புகழுடம்புகள் நேற்று ஆவரங்கால் இராமலிங்கம் நடராசா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. பெரும் எண்ணிக்கையானோர் கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

[ஒ-3-15-165]

'உதயன்' ஆதரவில்

## மத்தியஸ்தர்கள் தின ஒன்றுகூடல் இன்று

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் ''மத்தியஸ்தர்கள் தினம்'' ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உதைபந்தாட்ட விதிகள் பற்றிய விளக்கங்கள், மத்தியஸ்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல்கள், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கும் பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கும் இடையிலான வினா-விடைப் போட்டி ஆகியவை உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் மத்தியஸ்தர்கள் தின ஒன்று கூடலின் போது இடம்பெற உள்ளன.

மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் வெற்றிபெறுபவர்களுக்கு உதயன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் சான்றிதழ்களை வழங்குவார்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத் தலைவர் திரு. ஈ. கனகலிங்கம் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும். [இ

## ஷப்றா கிண்ண இறுதியாட்டம்

# ஷப்றா - ஜொனியன்ஸ் நாளை மோதுகின்றன

''ஷப்றா'' கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

40 ஓவர்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதுகிறது.

நாளை காலை 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்.

யாழ். விவசாயத் திணைக்களத்தின் உதவி இயக்குனர் திரு. கே. குணரத்தினம் இந்த ஆட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி. கருணேஸ்வரி குணரத்தினம் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்குவார்.

பதினாறு அணிகள் பங்குபற்றிய இந்த போட்டித் தொடர் ''நொக் - அவுட்'' ரீதியில் நடத்தப்பட்டது.

அரையிறுதியாட்டங்களில் பலம் பொருந்திய யாழ். சென்றலைட்ஸ் அணியை யாழ். ஜொனியன்ஸ் அணியும், திறமைமிக்க ஜொலிஸ்ரார்ஸ் அணியை ஷப்றா அணியும் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.


# எழுதுவினைஞர்

(பயிலுனர்)

**Accounts Clerk** (*Trainee*)

எமது நிறுவனத்தில் எழுதுவினைஞர் [பயிலுனர்] பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். கிரிக்கெட் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**SHABRA**
Power House Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### திரு. கனகசபை பரராஜசிங்கம்

(தெய்வநாயகி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கனகசபை பரராஜசிங்கம் அவர்கள் 24-5-92 ஞாயிறு காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசிங்கம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அருமைக் கணவரும், திருக்குமார் [ஜேர்மனி], சத்தியகுமார் [கனடா], திருமதி கி. சுகிர்தா [நோர்வே], கௌரி, ஜெயக்குமார் [ஜேர்மனி] ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், கிருபாகரனின் [நோர்வே] அன்பு மாமனாரும், சிவாம்பிகை, புனிதவதி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் [செட்டி], பாலசிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுந்தரம் [பாலாஜி இன், கொழும்பு], துரைசிங்கம், காலஞ்சென்ற கோபாலன் மற்றும் இராஜமணி, சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், சித்திரவேல் [சுவிஸ்], தெய்வநாயகியின் சகலனும், திரு. திருமதி இராசா அன்னபூரணம் ஆகியோரின் சம்பந்தியும், கிருபாஹரியின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31 - 5 - 92 முற்பகல் 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. பரமேஸ்வரி
(மனைவி)
19 ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
[21188]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 05 - 1992 [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org